




# வாரீர்
# தொழுதிடுவோம்








## திருவருகைக் கால
## செபங்கள் மற்றும் பாடல்கள்





| எ ண் | செபங்கள் | பக்கம் |
|---|---|---|
| 1 | திருவருகைக் கால மெழுகுவர்த்திகள் | 1 |
| 2 | திருவருகைக் கால செபமாலை | 3 |
| 3 | எதிர்நோக்கி காத்திருந்த அன்னையிடம் செபம் | 4 |
| 4 | உலகமீட்பர் புகழ்மாலை | 4 |
| எ ண் | பாடல்கள் | பக்கம் |
| 1 | அமைதியின் இளவரசே | 7 |
| 2 | ஆண்டவர் வழியை | 7 |
| 3 | ஆண்டுக்கு ஒருமுறை | 7 |
| 4 | இயேசுவே ஏன் இன்னும் | 8 |
| 5 | இயேசுவே வாராய் நீ | 8 |
| 6 | உந்தன் மடியினில் | 9 |
| 7 | எத்தனைக் காலம் | 9 |
| 8 | திருவருகைக் கால மெழுகுவர்த்திகள் ஏற்றப்படும் போது... பாடல் | 9 |
| 9 | கருணைக் கடலே வா | 9 |
| 10 | மன்னவன் உனைத் தேடி | 9 |
| 11 | மாரநாத்தா என் இயேசு | 10 |
| 12 | மானுவேலா | 10 |
| 13 | மீட்பின் காலம் அண்மை | 10 |
| 14 | வந்தருளும் ஆண்டவரே | 11 |
| 15 | வரவேண்டும் | 11 |
| 16 | வாரும் வாரும் | 11 |
| 17 | தேவ ராஜா வருகின்றார் | 12 |
| 18 | தேவன் வருகின்ற நேரம் | 12 |
| 19 | கிறிஸ்து பிறப்பு நவநாள் | 12 |
| 20 | கிறிஸ்து பிறப்பு நவநாள் (புதிய மொழிப்பெயர்ப்பு) | 13 |
| 21 | வானமே மகிழ்வாய் | 14 |
| 22 | வானமே மகிழ்வாய் (புதிய மொழிப்பெயர்ப்பு) | 14 |
| 23 | தெளிக்குரல் | 15 |


## திருவருகைக் கால மெழுகுவர்த்திகள்

"ஆயத்தமாய் இருங்கள். ஏனெனில் நீங்கள் நினையாத நேரத்தில் மானிட மகன் வருவார்" (மத்தேயு: 24: 44)

கிறிஸ்துவின் பிறப்பு உலக வரலாற்றில் நடந்து முடிந்த ஒரு நிகழ்ச்சி என்றாலும் மீட்புப் பணியின் முதற் கட்டமாகிய அவரின் மனிதப்பிறப்பை நாம் தியானித்து ஞான நன்மைகளைப் பெற தாய் திருச்சபை ஒரு குறிப்பிட்ட காலத்தை பிரித்துள்ளது. இதுவே திருவருகைக் காலம். மேலும் கிறிஸ்துவின் மகிமையான இரண்டாம் வருகையை எதிர்நோக்கி நமது வாழ்வை செம்மை செய்யவும், பாவங்களுக்கு தக்க பரிகாரம் செய்து தூய்மையான நிலையில் அவரை நம் உள்ளங்களில் மீண்டும் பிறக்கச் செய்யவும் வாய்ப்பளிக்கும் வகையில் இக்காலம் அமைந்துள்ளது. இஸ்ராயேல் மக்கள் மெசியாவின் வருகைக்கு ஆண்டாண்டு காலமாய் காத்திருந்தது போல நாமும் காத்திருப்போம். அன்று இயேசு மொழிந்த பத்து தோழியர் உவமையில் விளக்குகளுடன் அக்கன்னியர் மணமகனின் வருகைக்காக காத்திருந்தனர்.

நாமும் விளக்கு ஏற்றி அவருக்காக காத்திருக்க வேண்டும் என்ற நோக்குடன் விளங்கும் ஒரு வெளியடையாள செயலே, திருவருகைக்கால மெழுகுவர்த்திகள் ஏற்றும் முறை. இவ்வழக்கம் பல ஆண்டுகாலமாய் நம் கத்தோலிக்க மரபில் இருந்து வருகிறது. ஒவ்வொரு வாரமும் ஒரு மெழுகுவர்த்தி ஏற்றப்படும். அப்போது பயன்படுத்தக் கூடிய செபங்களும் பாடல்களும் இந்த கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த திருவருகைக்காலத்தை அர்த்தமுள்ள வகையில் கொண்டாடி ஒளியாம் கிறிஸ்துவை நம் இல்லங்களிலும் உள்ளங்களிலும் ஒளியுடன் வரவேற்போம்.

முதல் வாரம் (ஊதா நிறம்)

இதுதான் நம்பிக்கையின் மெழுகுவத்தி. இது மீட்பரின் வருகைக்காக காத்திருந்த நம் முதுபெரும் தந்தையர்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரை குறிக்கின்றது. "கவனமாய் இருங்கள், விழிப்பாய் இருங்கள். ஏனெனில் அந்நேரம் எப்போது வருமென உங்களுக்கு தெரியாது." (மாற்கு 13: 33) ஆண்டவர் நம்மை விழிப்புடன் காத்திருக்கும்படி கேட்கிறார்.

ஆனால் நாமோ உலக கவலைகளிலும் கவர்ச்சிகளிலும் நம் மனங்களை செலுத்தி வாழ்ந்து வருகிறோம். இனியாவது, "ஆண்டவரே பேசும். உம் அடியான் கேட்கிறேன்" என்று கூறி அவரின் வருகைக்காக நம்மையே ஆயத்தப்படுத்துவோம்.

செபம்:

இம்மானுவேலே!
இயேசு கிறிஸ்துவே!
எல்லா நாடுகளும் எதிர்பார்க்கும் ஆண்டவரே அனைத்து மக்களின் மீட்பரே! வந்து எங்களிடையே தங்கும். ஆமென்.

இரண்டாம் வாரம் (பச்சை நிறம்)

இதுதான் அமைதியின் மெழுகுவத்தி. மீட்பரின் வருகை, வரும் காலம், அவரின் இயல்புகள் போன்ற அனைத்து செய்திகளையும் தந்த இறைவாக்கினர்களான எசாயா, எரேமியா, தானியேல் போன்றோரை குறிக்கிறது. "மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது" (மத்தேயு 3: 1)

இறைவாக்கினர்கள் அனைவரும் மீட்பரின் வருகைக்காக நாம் எவ்வகை தயாரிப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என எடுத்துரைத்துள்ளனர்.

நாம் அனைத்தையும் அறிந்திருந்தும் நம் வலுவின்மையாலும், விசுவாச குறைவாலும் மீண்டும் மீண்டும் ஆண்டவரை விட்டு விலகி செல்கிறோம். இனியாவது அவரில் நம்பிக்கை கொண்டு அவரை நாடி தேடுவோம்.

செபம்:
ஓ இயேசு கிறிஸ்துவே! அனைத்து உலகங்களின் அரசரே! எல்லா இதயங்களின் மகிழ்ச்சியே! விரைவில் வந்து உம் மக்களை மீட்டருளும். ஆமென்.

மூன்றாம் வாரம் (ரோஸ் நிறம்)

இதுதான் மகிழ்ச்சியின் மெழுகுவத்தி. இது மீட்பரின் முன்னோடியான புனித திருமுழுக்கு யோவானை குறிக்கிறது. “பாலைநிலத்தில் குரல் ஒன்று முழங்குகிறது: ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள்; அவருக்காக பாதையை செம்மையாக்குங்கள்; பள்ளத்தாக்குகள் எல்லாம் நிரப்பப்படும்; மலை குன்று யாவும் தாழ்த்தப்படும்; கோணலானவை நேராக்கப்படும்; கரடுமுரடானவை சமதளமாக்கப்படும். மனிதர் அனைவரும் கடவுள் அருளும் மீட்பை காண்பர்” (லூக்கா 3: 4 - 6)

நாம் மீட்பின் காலத்தை நெருங்கிவிட்டோம். திருமகன் கிறிஸ்துவை அறச்செயல்கள் நிறைந்த வாழ்வினால் சந்திக்க ஆவலுடன் காத்திருக்கின்றோமா? அவர் வரும்போது அவரது வலப்பக்கம் நிற்கவும், விண்ணரசை அடையவும் ஏற்புடையவர்களாவோம்.

செபம்:
உலகத்தின் ஒளியே! உண்மையின் சுடரே! இயேசு கிறிஸ்துவே வந்தெம்மை தேற்றும். ஆமென்.

நான்காம் வாரம் (சிவப்பு நிறம்)

இது அன்பின் மெழுகுவத்தி. அன்னை மரியாவையும் அவர் கணவர் புனித யோசேப்பையும் குறிக்கிறது. “அவர் பெரியவராய் இருப்பார்; உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தின் மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவரது ஆட்சிக்கு முடிவே இராது.” (லூக்கா 1: 32-33)

மீட்பரை சந்திக்க அன்னை மரியாவும் புனித யோசேப்பும் எவ்வாறு ஆயத்தமாய் இருந்தனரோ, அவர்களை போல நம்மை மீட்க வந்த பாலனை வரவேற்க நம்மை தயார்படுத்த இதுவே இறுதி வாய்ப்பு.

அன்னையின் எதிர்நோக்கையும் புனித யோசேப்பின் நேர்மை தனத்தையும் கொண்டு வாழ முயல்வோம்.

செபம்:
உலகை கடந்த ஞானமே! உண்மை கடவுளின் வார்த்தையே! இயேசு கிறிஸ்துவே! வந்து மீட்பின் பாதையை எமக்கு காட்டும். ஆமென்.

## திருவருகைக் கால செபமாலை

மூவேளை செபம்
நம்பிக்கை அறிக்கை

1. புனித இறை அன்னையே! நீர் குழந்தை இயேசுவுக்கு தாயாக முன்குறிக்கப்பட்ட நேரம் புனிதமானது என்று அனைவரும் இறைவனுக்கு நன்றி கூறுகிறோம்
(1 விண்ணக 10 அருள் 1 தந்தை)

2. புனித இறை அன்னையே! நீர் குழந்தை இயேசுவை பெற்ற நேரம் புனிதமானது என்று அனைவரும் இறைவனுக்கு நன்றி கூறுகிறோம்
(1 விண்ணக 10 அருள் 1 தந்தை)

3. புனித இறை அன்னையே! நீர் குழந்தை இயேசுவை முதல் முறை கட்டித்தழுவிய நேரம் புனிதமானது என்று அனைவரும் இறைவனுக்கு நன்றி கூறுகிறோம்
(1 விண்ணக 10 அருள் 1 தந்தை)

4. புனித இறை அன்னையே! நீர் குழந்தை இயேசுவுக்கு முதல் முறை பால் கொடுத்த நேரம் புனிதமானது என்று அனைவரும் இறைவனுக்கு நன்றி கூறுகிறோம்
(1 விண்ணக 10 அருள் 1 தந்தை)

## எதிர்நோக்கி காத்திருந்த அன்னையிடம் செபம்

முதல் பெற்றோர் வழிப்பிறந்த அனைத்து மானுடரிலும் உலக மீட்பர் இயேசு கிறிஸ்துவுக்கு தாயாய் இருக்க இறைவனால் முன்குறிக்கப்பட்டவரும், அதற்காக வேண்டிய அனைத்து வரங்களையும் முழுமையாய் அடைந்தவரும், அடைந்த வரங்களைக் கொண்டு நடத்திய தூய வாழ்வினால் மகனாகிய இறைவன் உம்முடைய திருவயிற்றில் தூய ஆவியாரால் கருத்தரிக்க தெரிந்துக்கொள்ளப்பட்ட அன்னையே! உம்முடைய மகன் பிறக்கப்போகிற நாள் நெருங்கி வருகின்றது என்று நீர் அறிந்து, அவரைப் பார்க்கவும், அவருக்கு பணிவிடைப்புரியவும் உமக்கிருந்த ஆசையைப் பார்த்து எனக்கும் இந்தத் திருநாளில் அவர் பேரில் ஆசை வரவேண்டும் என்றும், அவரைப் பார்த்து, அவருக்கு திருப்பணியாற்ற நீர் தகுதியாக இருக்க வேண்டும் என்று செய்த முன் தயாரிப்பை தியானித்து நானும் அவருக்கு ஏற்ற பணி

செய்ய என்னையே ஆயத்தம் செய்ய வேண்டும் என்றும் வேண்டுகிறேன். நீர் செய்தது போல் என்னால் செய்ய முடியாவிட்டாலும், நான் இந்த நாளை சிறந்த முன் தயாரிப்புக்களுடன் எதிர்கொள்ள எனக்கு கற்றுத்தாரும். செபம், தபம், தர்மம் என்று இந்த திருவருகைக் காலத்தில் என் இதயக் குடிலை அலங்கரிக்க எனக்காக பரிந்து பேசும். ஆமென்.

## உலக மீட்பர் புகழ்மாலை

ஆண்டவரே இரக்கமாயிரும்
கிறிஸ்துவே இரக்கமாயிரும்
ஆண்டவரே இரக்கமாயிரும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை கேட்டருளும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை கனிவாக கேட்டருளும்
விண்ணக தந்தை இறைவா எங்கள் மேல் இரக்கமாயிரும்
உலகை மீட்ட மகன் இறைவா
தூய ஆவியாராகிய இறைவா
தூய மூவொரு இறைவா

- மனுவுருவான வார்த்தையே
- எங்களுக்கு கட்டளை தந்த ஆண்டவரே
- அனைத்தையும் படைத்த ஆண்டவரே
- போதகரின் தலைவரே
- திருப்பொழிவு செய்யப்பட்ட ஆண்டவராகிய மீட்பரே
- தந்தையின் மகனே
- எங்கள் நம்பிக்கையே
- வாழ்வின் மரமே
- உயிருக்கு ஒளியே
- வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் நடுவரே
- இருக்கிறவரும், இருந்தவரும், வரப்போகிறவருமாய் இருக்கிறவரே
- கருணை கூர்ந்து எங்கள் பாவங்களை மன்னித்தருளும் ஆண்டவரே
- கருணை கூர்ந்து எங்கள் மன்றாட்டை கேட்டருளும் ஆண்டவரே
- உமது பிறப்பைப் பார்த்து எங்களை மீட்டருளும் ஆண்டவரே
- உமது வருகையைப் பார்த்து எங்களை மீட்டருளும்
- உமது தாழ்மையைப் பார்த்து
- உமது வல்லமையை பார்த்து
- உமது கன்னித்தாய் தூய மரியாள், தந்தை புனித யோசேப்பைப் பார்த்து
- உமக்கு பிரியப்பட்ட அனைவரையும் பார்த்து
- எங்களுக்கு வான்வீட்டின் பேரின்பத்தை தந்தருள வேண்டும் என்று உம்மை மன்றாடுகிறோம் எங்கள் மன்றாட்டை கேட்டருளும்

- மனத்தாழ்மையையும் இனிய குணத்தையும் அடைய வேண்டும் என்று உம்மை மன்றாடுகிறோம் ... எங்கள் மன்றாட்டை கேட்டருளும்
- எங்கள் எதிரிகளையும் நாங்கள் அன்பு செய்யும் வரத்தை அருள உம்மை மன்றாடுகிறோம்
- உடலை வதைக்கிறவர்களுக்கு பயப்படாமல் ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் தள்ள வல்லமை படைத்த இறைவனுக்கு அஞ்சி நடக்க வரந்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்
- பூமியில் செல்வம் தேடாமல் விண்ணுலகின் செல்வங்களை தேடும் வரம் தர வேண்டும் என்று உம்மை மன்றாடுகிறோம்
- பிறர் எங்களுக்கு செய்ய நாங்கள் விரும்பாதவற்றை நாங்களும் அவர்களுக்கு செய்யாதிருக்க வரம் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்
- உலக பெரும் பாதையை விலக்கி உமது நெருக்கமான பாதையில் நுழைய வரம் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்
- எமது சிலுவைகளை பொறுமையோடு சுமக்க வரம் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்
- உமது கட்டளைகளின் படி நாங்கள் நடக்க வரம் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம் .........
- முடிவு வேளையில் நன்மையில் நிலைத்திருக்க வரம் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்
- உலகின் பாவங்களை போக்கும் இறைவனின் செம்மறியே
    - எங்கள் பாவங்களை மன்னியும்
    - எங்கள் மன்றாட்டை கேட்டருளும்
    - எங்கள் மேல் இரக்கமாயிரும்

செபிப்போமாக: இறைவா! ஒன்றுமில்லாமையில் இருந்து மனிதனைப் படைத்து, மீட்புக்கு வழி வகுக்க உம் திருமகனை உலகிற்கு அனுப்பி வைத்தீரே! நாங்கள் உம்மை முழு ஆற்றலோடும், முழு மனதோடும், முழு நினைவோடும் அன்பு செய்யும் வரத்தை தாரும்.
எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

## திருவருகைக் கால பாடல்கள்

[1] அமைதியின் இளவரசே
வாரும் விரைவாய் வந்தருளும்
அமைதியின் இளவரசே
விரைவாய் வந்தருளும்
*ஈசாயின் தளிரே
வாரும் விரைவாய் வந்தருளும்
ஈசாயின் தளிரே
விரைவாய் வந்தருளும்
*நம்பிக்கையின் விடிவெள்ளியே
வாரும் விரைவாய் வந்தருளும்
நம்பிக்கையின் விடிவெள்ளியே
விரைவாய் வந்தருளும்
*உலகோர் எதிர்ப்பார்ப்பே
வாரும் விரைவாய் வந்தருளும்
உலகோர் எதிர்ப்பார்ப்பே
விரைவாய் வந்தருளும்
*மீட்க வந்த மெசியாவே
வாரும் விரைவாய் வந்தருளும்
மீட்க வந்த மெசியாவே
விரைவாய் வந்தருளும்

[2] ஆண்டவர் வழியை
ஆயத்தம் செய்வோம்
அவரின் பாதைகளை
செம்மையாய் ஆக்குவோம் [2]
செல்லுவோம் - 2
அவர் வழியில் நாம் செல்லுவோம் [2]
1. பள்ளத்தாக்குகளெல்லாம்
நிரம்ப செய்வோம்
மலைகள் குன்றுகளெல்லாம்
தாழ்த்தி வைப்போம் [2]
கோணலானவற்றை
நேராக ஆக்குவோம் [2]
கரடுமுரடானவற்றை
சமமாக்கி வழிநடப்போம்
2. மனிதரெல்லாரும் தமது
மீட்பைக் காண
கடவுள் வந்துவிட்டார்
நம்மைக் கண்டுவிட்டார் [2]
மனம் திரும்புவோம்
நற்செய்தி நம்புவோம் [2]
விண்ணரசு நெருங்கிவிட்டது
நம்மிடையே வந்துவிட்டது

[3] ஆண்டுக்கு ஒருமுறை
வருகிறது திருவருகைக்காலம்
மனதினில் சந்தோசம் பொங்கிடுது
இறைப்பிறப்பின் காலம்
அந்த தேவன் வருகையில்
இந்த பூமி மகிழுது
ஒளிதீபம் இதயத்தில்
தேவ கானம் கேட்குது
வருகையின் காலமிது
1. தலைமகன் இயேசு பிறந்திடும்
காலம் இதயத்தை நாமும்
அலங்கரிப்போம்
மேடும் பள்ளமும் நிறைந்த
நம் வாழ்வில்
சமன் செய்ய இன்றே முயன்றிடுவோம்
கல்லும் முள்ளும் நிறையும்
பாதையில் சுவடு இல்லை
இரவும் பகலும் உழைக்கும்
வாழ்வில் இனிமை இல்லை
தீமைகள் களைந்து
நன்மைகள் விதைப்போம்
பிறப்பைக் காணுவோம்
2. ஒரு பிள்ளை குடும்பத்தில்
பிறக்கின்றபோது
எத்தனை எத்தனை எதிர்ப்பார்ப்பு
தாயும் சேயும் நலமாய் வாழ
வகைவகையான உபசரிப்பு

மாடுகள் அடையும் தொழுவம்
மன்னன் பிறப்பும் அரண்மனை
எதிர்பார்ப்புகள் இல்லா ஏழை
அண்ணலின் அன்பு உறவுகள்
உள்ளத்தில் குழந்தை
உபசரித்திடுவோம் போற்றியே
வாழ்த்துவோம்

[4] இயேசுவே ஏன் இன்னும் தாமதம்?
[இயேசுவே வாரும் வாரும்]
1. உனைக்காண ஆவலாய்
காத்திருந்தேன் [2]
உடன் பேச எனக்குள்ளே
தவமிருந்தேன் [2]
2. உன்னோடு உறவாட
காத்திருந்தேன் [2]
உனக்குள்ளே நான் வாழ
நினைத்திருந்தேன் [2]
3. உன் வார்த்தை நான் வாழ
காத்திருந்தேன் [2]
என் வாழ்க்கை நீயாக
நினைத்திருந்தேன் [2]

[5] இயேசு வாராய் நீ வாராய்
எந்தன் வாழ்வினிலே [2]
வேகமாய் நீ வாராய்
எந்தன் வாழ்வினிலே [2]
வேகமாய் இறங்கி வாராய்
எந்தன் வாழ்வினிலே
இயேசு வாராய்...
1. இயேசு வாராய் நீ வாராய்
எந்தன் வியாதியிலே [2]
வேகமாய் நீ வாராய்
எந்தன் வியாதியிலே [2]
வேகமாய் இறங்கி...
2. இயேசு வாராய் நீ வாராய்
எந்தன் ஆன்மாவிலே [2]
வேகமாய் நீ வாராய்
எந்தன் ஆன்மாவிலே [2]
வேகமாய் இறங்கி...

[6] உந்தன் மடியினில்
நிம்மதி வேண்டினேன்
உந்தன் அருளினில்
நிலைத்திட வாடினேன்
நினைவினிலும் உனை
தரிசிக்க தேடினேன்
நிலையில்லாத உலகில் உன்
துணையை யாசித்தேன்
வா என்னில் நீ வாழ வா
வந்து என்னை ஆள வா
வா என்னை நீ தேற்ற வா
அன்பில் நனைத்திட வா
உறவை எண்ணி வாடினேன்
உணர்வில் கலந்திட வா - 2
2. மௌன மொழியினில்
உன்னிடம் பேசினேன்
மலர்ந்த விழிகளில்
உன் ஒளி நாடினேன்
சொந்தமென்றுன்னை
கொண்டிட ஏங்கினேன்
சுகமாய் உன்னில் வாழ்ந்திட
என்னை தந்தேன்
வா என்னில் நீ...
3. தென்றலாய் என்னை
வருடியே மகிழ்வித்தாய்
தேடி என்னை நோக்கியே வந்திட்டாய்
எல்லையில்லா பாசத்தால்
நிறைத்திட்டாய்
எந்தன் உயிரை உனக்கென
என்னை சேர்த்திட்டாய்
வா என்னில் நீ...

[7] எத்தனை காலம் நான்
காத்திருந்தேன்
அய்யனே உனை தேடி
பூத்திருந்தேன் - நான்
எத்தனை காலம் ......
1. தாகம் தீர்த்திடும்
வாழ்வின் ஊற்றும் நீ
பசியை போக்கிடும்
உயிருள்ள உணவும் நீ [2]
நானும் உனை சேர்ந்த
கிளையாவேன் நீயோ எனை
தேர்ந்த ஆயனாவாய் [2]
2. வார்த்தையான உன்னத
இறைவன் நீ முதலும் முடிவுமான
மூவொரு தேவன் நீ [2]
காலடிக்கு உந்தன்
வாக்கே விளக்கு
பாதை அதற்கு
ஒளியும் அதுவே [2]

[8] திருவருகைக்கால
மெழுகுவர்த்திகள் ஏற்றப்படும்
போது பாட வேண்டிய பாடல்...
முதல் வாரம்: ஓ உதயமே
நிலையான ஒளிச்சுடரே
நம்பிக்கையின்
விடிவெள்ளியே வாராய்
முதுபெரும் தந்தையர்க்கு
வாக்களிக்கப்பட்ட எதிர்ப்பார்ப்பே
ஒளியை வீசுவாய்

இரண்டாம் வாரம்: ஓ உதயமே
நிலையான ஒளிச்சுடரே
அமைதியின் இளவரசே வாராய்
இறையாக்கினர் முன்மொழிந்த
இறைவார்த்தையே
ஒளியை வீசுவாய்

மூன்றாம் வாரம்: ஓ உதயமே
நிலையான ஒளிச்சுடரே
மகிழ்ச்சியின்
விளைநிலமே வாராய்
திருமுழுக்கு யோவான்
முழக்கமிட்ட வரவிருக்கும்
மெசியாவே
ஒளியை வீசுவாய்

நான்காம் வாரம்: ஓ உதயமே
நிலையான ஒளிச்சுடரே
அன்பு களஞ்சியமே வாராய்
அன்னை மரியாள் சூசை
முனியின் வளர்பிறையே
ஒளியை வீசுவாய்

[9] கருணை கடலே வா
கதித்த தயாபரா வா
சுருதி மறையோர்க்கு
சுடரொளியே வா
1. இம்மானுவேல் ஏகநாதா
எங்கள் பாவ தோஷம் தீர
ஏன் இன்னும் வர தாமதம்
2. அதோனாயி ஆனந்தமே
ஆவலுடன் காத்திருக்கும்
அடியோர்களை சந்திக்க

[10] மன்னவன் உனைத் தேடி
இங்கு வருகின்றார்
மனக்கதவே நீயும் கொஞ்சம்
தாள் திறவாயோ [2]
மன்னவன் உனைத் தேடி
இங்கு வருகின்றார் ஆ...
1. கண்ணிரண்டில் நீரை தாங்கி
காத்திருந்தாயே [2]
மன்னவன் தன் வருகைக்காக
பூத்திருந்தாயே [2]

இந்நொடியின் ஏக்கமெல்லாம்
தீர்ந்துப்போகாதோ (2)
எந்தன் மன்னன் பொற்பதங்கள்
சேர வேண்டாமோ
2. இரவு நேர உதயம் போல
எழுந்து வந்தாயே (2)
எழுந்துடுவீர் தூங்குவோரே
என்றுரைத்தாயே (2)
இந்நொடியில் எனது வானம்
விடியல் காணாதோ (2)
எந்தன் மன்னன் உறங்க மனமே
தொட்டில் ஆகாதோ

(11) மாரநாத்தா என் இயேசு
நாயகனே மீண்டும் வாரும் (2)
என் கண்ணீர் துடைத்திடவே
உம்மில் நாம் மகிழ்ந்திடவே (2)
என் இயேசுவே வான் மண்டலம்
விடுத்து வரவேண்டுமே
1. வான தூதர் புடை சூழ்ந்திடவே
வரும் வேளை (2)
எனக்காய் நொறுக்கப்பட்ட
உம் பொன் முகம் முத்தவே (2)
நீருக்காக ஏங்கிடும்
மலரை போல காத்திருப்பேன்
2. வெள்ளை ஆடை அணிந்த
புனிதருடன் சேர்ந்து நானும் (2)
அல்லேலூயா பாடவே
உம் சமுகம் நாடினேன் (2)
முன்மதியை கொண்ட கன்னியரை
போல் தயார் செய்வேன்
3. சூர்ய சந்திர விண்மீனையும்
கடந்து மோட்ச வீட்டில் (2)
உன்னதரின் ஆற்றில்
வாழ்வின் மர நிழலில் (2)
உம்முடனே வாழ ஆசிக்கிறேன்
மணவாளரே

(12) மானுவேலா மானுவேலா
மாதயாபரா வருக (2)
மண்ணகத்தோரை மீட்க
மன்னவனே வருக
1. பவ இருளை அகற்ற
புது ஒளியே வருக (2)
விடிவெள்ளியே விடிவெள்ளியே
கனிவுடனே வருக
2. வானக வழி திறக்க
வல்லவனே வருக (2)
வழித்துணையே வழித்துணையே
வளமுடனே வருக
3. அடியவர் மீட்படைய
அருள்வடிவே வருக (2)
அரிட்புனலே அருட்புனலே
அன்புடனே வருக

(13) மீட்பின் காலம்
அண்மையில் உள்ளது
விழித்தே எழுந்திடுவோம்
இறுதிக்காலம் இதுவென அறிந்து
பாதையை சரி செய்வோம்
இரவோ மறையும்
பகலோ புலர்ந்திடும்
ஒளியின் வரவில்
உலகம் மகிழ்ந்திடும்
இருளின் ஆட்சி செயல்கள்
யாவும் களைவோம்
ஒளியின் ஆட்சி படையின்
கலனை அணிவோம்
1. பகலினில் காணும்
கண்ணியம் நிழலென
வாழ்வை தொடரட்டும் (2)
களியாட்டம் குடிவெறியும் காமம்
ஒழுக்கக்கேடும் தவிர்த்தே
வாழ்ந்திடுவோம்

சண்டை பொறாமையும்
வலுவற்ற இயல்புகளும்
தகர்ந்திட வேண்டிடுவோம்
2. ஆண்டவர் வரும் நேரமோ
மானிடர் யாரும் அறிவரோ? [2]
கன்னம் வைக்கும் திருடனைப்
போல் சாமத்தில் வந்திடுவார்
விழிப்பாய் இருந்திடுவோம்
நினையாத நேரத்திலே
மனுமகன் வந்திடுவார்
ஆயத்தமாய் இருப்போம்

[14] வந்தருளும் ஆண்டவரே
விரைவாய் வந்தருளும் [2]
வேண்டுகிறேன் தினமும்
தொடந்து...
துவளுகின்றேன் தினமும்
தனியே...
தேடுகிறேன் தினமும்
மகிழ்வாய் ...
அழுகின்றேன் தினமும்
தொடர்ந்து ...
புலம்புகின்றேன் தினமும் அழுது ...
வருந்துகிறேன் தினமும்
நொந்து...

[15] வரவேண்டும் - 2
இறைவா ... 2
உம் வரவால் எம் உள்ளங்கள்
நிலைவாழ்வு பெறவே
வரவேண்டும் - 2 இறைவா ... 2
1. பாலை நிலங்களில் வரும்
கானல் நீர் போல
இம்மண்ணில் வரும்
இன்பம் வெறும் மாயையே [2]
ஆதரவாக எம் வாழ்விலே
நீதானே வர வேண்டுமே [2]
உண்ணாமல் உறங்காமல்
தவமிருக்கின்றோம்
உம் பார்வை விழி வைத்துக்
காத்திருக்கின்றோம் [2]
வரவேண்டும் - 2 வரவேண்டுமே
2. நீரின்றி வாடிடும்
வயல் காடு அது போல
நீயின்றி என் உள்ளம்
தினம் வாடுமே [2]
தீயவர் கோடி எனை சூழ்கையில்
தூயவன் நீயே வர வேண்டுமே [2]
உண்ணாமல்...

[15] வாரும் வாரும் இம்மானுவேல்
தாரும் மீட்பை இம்மானுவேல் [2]
வாடும் மக்கள் தம் உள்ளம் பாரும்
மாரநாத்தா கிறிஸ்துவே வாரும்
மகிழ்வாய் மகிழ்வாய் இம்மானுவேல்
வருவார் உன்னிடம் இஸ்ராயேல் [2]
2. வாரும் வாரும் உயர் ஞானமே
உம் வாக்கால் எல்லாம் கூடுமே [2]
காட்டும் உம் தம் மீட்பின் பாதை
போக்கும் எம் தம் வாழ்வில் வாதை
மகிழ்வாய் ...
3. வாரும் - 2 ஈசாயின் தளிரே
தாரும் மீட்பை அலகை
பிடியினின்றே [2]
உம் மீட்பதனை நம்பியுள்ளோம்
தாரும் வெற்றி இறுதி நாளிலே
மகிழ்வாய் ...
4. வாரும் தாவிதின் திறவுகோலே
வாழ்வின் வழியை
திறக்கும் கோவே [2]
காக்கும் உம் தம் மீட்பின் கரத்தால்
தாக்கும் எம் தம் உள்ளமதை
மகிழ்வாய் ...

5. வாரும் எங்கள் எதிர்ப்பார்ப்பே
கூட்டி சேர்ப்பீர் உலக மாந்தரை [2]
அமைதியின் இளவல் நீரே
அன்பும் அமைதியும் அருள்வீரே
மகிழ்வாய் ...

[16] தேவ ராஜா [விண்ணின்
வேந்தன்] வருகின்றார்
தேவ சுகம் [நலமும் வளமும்]
தருகின்றார் [2]
என் மனமெல்லாம் சந்தோஷம்
[பெருமகிழ்ச்சி] [2]
மன்னன் கிறிஸ்து வருகின்றார்
மனதில் அமைதி தருகின்றார்
மாறா வாழ்வு தருகின்றார்
1. மனதில் தோன்றும் கவலைகள்
என் மன்னர் மாற்றுகிறார்
மகிழ்ச்சி அமுதை ஊற்றுகிறார்
என் மனதை தேற்றுகிறார் [2]
இறைவா நீயே ஒளிவிளக்கு
எந்தன் இருளை ஒளிரச்செய்யும் [2]
2. இறைவா என்னை அமைதிக்கு
கருவியாக்கிக்கொள்ளும்
பகைக்கு மாறா அன்பினையும்
என் மனதில் மாற்றிவிடும் [2]
இறைவா தினமும் என்னிடம் வா
தேடும் நெஞ்சம் மகிழ்ந்திட வா [2]

[17] தேவன் [இறைவன்] வருகின்ற
நேரம் - உன்னை
தேடி வருகின்ற நேரம் [2]
பாவ வழிகளை மாற்று
பயண திசையையும் மாற்று [2]
1. விருந்தினர் வருகின்ற நேரம்
வீட்டினை அழகு செய்வாய்
விருந்தை படைக்கும் வேளை
பாத்திரம் துலங்க செய்வாய்
தேவன் [இறைவன்] வருகின்ற
போது ஆன்மாவின்
நிலையென்ன கூறு?
2. உடையை தினமும் துவைத்தாய்
உடலையும் அழகுற செய்தாய்
கிழிந்ததை தூற எறிந்தாய்
கறைகளை போக்கி வைத்தாய்
தேவன் [இறைவன்] வருகின்ற...

[17] கிறிஸ்து பிறப்பு நவநாள்
தேவ ராஜன் வருவார்
வாரும் ஆராதிப்போமே...
1. சீயோனே அகமகிழ்வாய்
எருசலேம் மகளே பூரிப்படைவாய்
இதோ ஆண்டவர் வருவார்
அந்நாளில் பேரொளி வீசும்
மலைகள் இன்பம் துளிர்க்கும்
குன்றுகள் பாலும் தேனும் பொழியும்
ஏனெனில் மாபெரும்
தீர்க்கதரிசி வருவார்
அவர் எருசலேமை சீராக்குவார்
2. இதோ தாவிதின் குலத்தினின்று
மனு தேவன் வருவார்
அவர் சிம்மாசனம்
ஏறுவதைக் காண்பீர்
அந்நாளின் நீங்கள்
ஆனந்தம் கொள்வீர்
3. இதோ நம் காவலரான
ஆண்டவர் வருவார்
அவர் சிரமதில் முடிசூடிய
இஸ்ரயேலின் ராயர்
ஒரு கடல் முதல் மறு கடல் வரை
பூமியின் ஒரு கோடி முதல்
மறு கோடி வரை
யாவையும் அடக்கி ஆட்சி செய்வார்

4. இதோ ஆண்டவர் தோன்றுவார்
அவர் சொல்லோ பொய்யாகா
அவர் தாமதம் செய்தாலும்
எதிர்ப்பாருங்கள்
ஏனெனில் தாமதிக்காமல் வருவார்
5. அன்று ஆட்டுத்தோல் மீது பெய்த
மழைப்போல் ஆண்டவர் இறங்குவார்
அந்நாளில் நீதியும்
சமாதானமும் செழிக்கும்
பூமியாளும் வேந்தர் எல்லோரும்
அவரை வணங்குவர்
மாந்தர் எல்லோரும் போற்றி சேவிப்பர்
6. நமக்கென பாலன் பிறப்பார்
அவரை வல்லப தேவன் என்பர்
தம்முடைய தந்தை தாவிதின்
சிம்மாசனம் ஏறி அவர்
செங்கோல் செலுத்துவார்
அவரது வல்லபத்தை
அவர் தோளிலே காண்பீர்
7. உன்னத கடவுளின் நகரமான
பெத்லகேமே உன்னிடமிருந்தே
இஸ்ரயேலின் அதிபர் எழுந்தருள்வார்
அவர் வருகை நித்திய நாட்களின்
துவக்கத்தில் இருந்தது போல் ஆகும்
அவரை உலகெல்லாம் போற்றி புகழும்
அவர் வருங்கால் நம் நாட்டில்
சமாதானமே நிலைக்கும்

(18) கிறிஸ்து பிறப்பு நவநாள்
(புதிய மொழிப்பெயர்ப்பு)

இறை வேந்தர் வருவார்
வாரும் ஆராதிப்போமே...
1. சீயோனே அகமகிழ்வாய்
எருசலேம் மகளே பூரிப்படைவாய்
இதோ ஆண்டவர் வருவார்
அந்நாளில் பேரொளி வீசும்
மலைகள் இன்பம் துளிர்க்கும்
குன்றுகள் பாலும் தேனும் பொழியும்
ஏனெனில் மாபெரும்
இறைவாக்கினர் வருவார்
அவர் எருசலேமை சீராக்குவார்
2. இதோ தாவிதின் குலத்தினின்று
மனுமகன் வருவார்
அவர் அரியணை
ஏறுவதைக் காண்பீர்
அந்நாளில் நீங்கள்
பேருவகை கொள்வீர்
3. இதோ நம் காவலரான
ஆண்டவர் வருவார்
அவர் சிரமதில் முடிசூடிய
இஸ்ரயேலின் அரசர்
ஒரு கடல் முதல் மறு கடல் வரை
பூமியின் ஒரு கோடி முதல்
மறு கோடி வரை
யாவையும் அடக்கி ஆட்சி செய்வார்
4. இதோ ஆண்டவர் தோன்றுவார்
அவர் சொல்லோ பொய்யாகா
அவர் தாமதம் செய்தாலும்
எதிர்ப்பாருங்கள்
ஏனெனில் தாமதிக்காமல் வருவார்
5. அன்று ஆட்டுத்தோல் மீது
பெய்த மழைப்போல்
ஆண்டவர் இறங்குவார்
அந்நாளில் நீதியும்
அமைதியும் செழிக்கும்
பூமியாளும் வேந்தர்
எல்லோரும் அவரை வணங்குவர்
மாந்தர் எல்லோரும் போற்றி புகழ்வர்
6. நமக்கென ஒரு குழந்தை பிறப்பார்
அவரை வல்ல இறைவன் என்பர்
தம்முடைய தந்தை தாவிதின்
அரியணை ஏறி
அவர் செங்கோல் செலுத்துவார்

அவரது வலிமையை
அவர் தோளிலே காண்பீர்
7. உன்னத கடவுளின் நகரமான
பெத்லகேமே உன்னிடமிருந்தே
இஸ்ரயேலின் அரசர் எழுந்தருள்வார்
அவர் வருகை நிலையான
நாட்களின்
துவக்கத்தில் இருந்தது போல் ஆகும்
அவரை உலகெல்லாம் போற்றி புகழும்
அவர் வருங்கால் நம் நாட்டில்
அமைதியே நிலைக்கும்

[19] வானமே மகிழ்வாய்
பூமியே பூரிப்படைவாய்
மலைகளே ஆனந்தம் கொள்வீர்
*மலைகள் இன்பம் பொழிவதாக
குன்றுகள் நீதியை தருவதாக
*ஏனெனில் வருவார் நம் ஆண்டவர்
தம் எளியோர் மேல்
இரக்கம் கொள்வார்
*வானங்களே மேல் நின்று
நீதிமானைப் பனிப்போல் பெய்யுங்கள்
மேகங்களும் நீதிமானைப் பொழிக
மாநிலம் திறந்து மீட்பரை
பிறக்க செய்க
*ஆண்டவா எங்களை
நினைவு கூறும்
உமது மீட்புடன் எம்மை காண வாரும்
*ஆண்டவா எங்கள் மேல்
கருணைக் காட்டி
எம்மை மீட்டுக் ஈடேற்றும் சுவாமி
*உலகாளும் செம்மறி புருவையே
பாலைவனப் பாறையினின்று
சீயோன் மகளை
மலைக்கனுப்பிடும் சுவாமி
*வல்லப கடவுளாகிய ஆண்டவரே
எம்மை ஈடேற்ற வாரும்
உம் திருமுகத்தைக் காட்டும்
நாங்கள் ஈடேற்றம் அடைவோம்
*வாரும் ஆண்டவா
அமைதியில் எம்மைக் காண
உத்தம உள்ளமுடன் உம்மை
கண்டு களிப்போம்
*பூவுலகில் உம் திருவழிகளையும்
எல்லா நாட்டினர் மத்தியில்
உமது இரட்சிப்பையும் கண்டறிவோம்
*வாரும் உமது
வல்லமை எல்லாம் கொண்டு
எம்மை மீட்டு காத்திடும் சுவாமி
*ஆண்டவா கால தாமதம் செய்யாமல்
வாரும் நும் மக்களின் பாவ
கட்டவிழ்த்து தாரும்
*வானைப் பிளந்து
எந்நாள் இறங்கி வருவீரோ
நும் கனி முகத்தை கண்டாலோ
மலைகளும் உருகிப் பாயுமே
*வானோர்க்கு மேல்
வீற்றிருக்கும் தேவா
வாரும் உம் திருமுகத்தை
எமக்கு காண்பித்தருள்வீரே
*தந்தை தனையன்
தூய ஆவியானவர்
மூவருக்குமே புகழ் உண்டாவதாக
ஆதியில் இருந்தது போல்
இன்றும் என்றும்
முடிவில்லா காலமும் உண்டாவதாக

[20] [புதிய மொழிப்பெயர்ப்பு]
வானமே மகிழ்வாய்
பூமியே பூரிப்படைவாய்
மலைகளே பேருவகை கொள்வீர்
*மலைகள் இன்பம் பொழிவதாக
குன்றுகள் நீதியை தருவதாக

*ஏனெனில் வருவார் நம் ஆண்டவர்
தம் எளியோர் மேல்
இரக்கம் கொள்வார்
*வானங்களே மேல் நின்று
நீதிமானைப் பனிப்போல் பெய்யுங்கள்
மேகங்களும் நீதிமானைப் பொழிக
மாநிலம் திறந்து
மீட்பரை பிறக்க செய்க
*ஆண்டவரே எங்களை
நினைவு கூறும்
உமது மீட்புடன் எம்மை காண வாரும்
*ஆண்டவரே எங்கள் மேல்
கருணைக் காட்டி
எம்மை மீட்டுக் ஈடேற்றுவீரே
*உலகாளும் திருச்செம்மறியே
பாலைவனப் பாறையினின்று
சீயோன் மகளை
மலைக்கனுப்பிடுவீரே
*வல்ல கடவுளாகிய ஆண்டவரே
எம்மை ஈடேற்ற வாரும்
உம் திருமுகத்தைக் காட்டும்
நாங்கள் ஈடேற்றம் அடைவோம்
*வாரும் ஆண்டவரே
அமைதியில் எம்மைக் காண
தூய உள்ளத்துடன்
உம்மை கண்டு களிப்போம்
*பூவுலகில் உம்
திருவழிகள் யாவையும்
எல்லா நாட்டினர் மத்தியில்
உமது மீட்பையும் கண்டறிவோம்
*வாரும் உமது வல்லமை
எல்லாம் கொண்டு
எம்மை மீட்டு காத்திடவீரே
*ஆண்டவரே கால தாமதம்
செய்யாமல் வாரும்
உம் மக்களின் பாவ
கட்டவிழ்த்து தாரும்

*வானைப் பிளந்து
எந்நாள் இறங்கி வருவீரோ
உம் கனி முகத்தை கண்டாலோ
மலைகளும் உருகிப் பாயுமே
*வானோர்க்கு மேல்
வீற்றிருக்கும் இறைவா
வாரும் உம் திருமுகத்தை எமக்கு
காண்பித்தருள்வீரே
*தந்தை மகன் தூய ஆவியானவர்
மூவருக்குமே புகழ் உண்டாவதாக
தொடக்கத்தில் இருந்தது போல்
இன்றும் என்றும் முடிவில்லா
காலமும் உண்டாவதாக

[21] தெளிக்குரல் மறைந்தவை
எல்லாம் துலங்கிக் கூறுதே
கனவுகள் தூரம் ஓட
வானின்று இயேசு தோன்றுவார்
*வந்தார் செம்மறி புருவை
[உலகின் செம்மறி]
சும்மா எம் கடன் தீர்க்கவே
சேர்ந்தெல்லோரும்
கண்ணீர் விட்டே
தாழ்ந்து கேட்போம் மன்னிப்பையே
*உலகின் திவ்ய கர்த்தரே
[தூய மீட்பரே]
அடிமை ஊன் தரித்தாரே
மனுவை மனு மீட்கவே
தாம் படைத்தோரை காக்கவே
கற்பு நிறை தாய் வயிற்றில்
தானருள் புகுந்திடவே
தானறியா இரசியம்
கன்னி உதரம் தாங்கிற்றே
*நிர்மல [புனித] மார்பகம்
தேவ [இறை] ஆலயமாம் திடீரென
கணவன் அறியா தூயள்
மகனை கர்ப்பம் தரித்தாள் - ஆமென்